[*1996 ஆகஸ்ட் 20*

43--

தனித்து இயங்கிவரும் திருக்கோயில்களை அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல்

வினா எண் 619--**திரு. துரை சந்திரசேகரன்** : *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*--

(அ) தமிழ்நாட்டில் அறநிலைய ஆட்சித் துறைக்கு உட்படாமல் தனித்து இயங்கிவரும் திருக்கோவில்கள் மாவட்ட வாரியாக எத்தனை?

(ஆ) அக்கோவில்களை அறநிலையத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது?

விடை --

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை 36,253 ஆகும். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டிற்கு உட்படாமல் தனித்து இயங்கி வரும் திருக்கோயில்களின் விவரத்தை மாவட்ட வாரியாகவோ அல்லது மொத்தமாகவோ கொடுக்க இயலாது.

(ஆ) துறையின் கட்டுப்பாட்டிற்குள் வராத திருக்கோயில்களில் பிரச்சினை ஏதும் ஏற்பட்டால் மட்டுமே அல்லது நிர்வாகம் குறித்து புகார் ஏதும் வரப்பெற்றால் மட்டுமே அத்திருக்கோயில்கள் துறையின் கீழ் கொண்டுவரப்படும்.

44--

அருள்மிகு கோனேஸ்வரஸ்வாமி திருக்கோயில் சுவர்களை பழுதுபார்த்தல்

வினா எண் 633--**திரு. குத்தாலம் பி. கல்யாணம் :** *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*--